www.padippakam.com

# பாரிஸ் நகரில் திரு. சபாலிங்கம் படுகொலை ! மாற்றுக்கருத்துக்களுக்கு படுகொலை தீர்வாகாது.

விடுதலைப் போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவரும் எழுபதுகளின் ஆரம்பத்தில் முனைப்புடன் இயங்கிய தமிழ் இளைஞர் பேரவை பேரணி அமைப்புக்களின் உந்து சக்திகளில் ஒருவரும் எழுத்தாளரும் வெளியீட்டாளருமான சபாரத்தினம் சபாலிங்கம் அவர்கள் பரிஸ் நகரில் அவரது வீட்டில் வைத்து படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

1994 மே மாதம் 01ம் திகதி பிற்பகல் ஒரு மணியளவில் துப்பாக்கிகளுடன் அவரது வீட்டுக்குள் நுழைந்த இரண்டு தமிழ் வாலிபர்கள் அவரது மனைவி குழந்தையின் முன்னிலையில் சபாலிங்கத்தின் மீது பல துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்தபின் தொலைபேசி மற்றும் சகல தொடர்புகளையும் நாசம் செய்து குடும்பத்தினரையும் எச்சரித்து தலைமறைவாகி விட்டனர். 1970 களில் விடுதலைக்காக போராட்டத்தில் இறங்கி தமிழ் இளைஞர்களை "பயங்கரவாதிகள்" என்ற போர்வையில் சிறிலங்கா அரசு கைது செய்த வேளையில் சபாலிங்கம் பாலம் ஒன்றிற்கு குண்டு வைத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சிறையிலிடப்பட்டார். மாடிச் சிறையிலிருந்து தப்பியோடும்போது நாரியில் முறிவேற்பட்டு ஐந்து வருடங்கள் சிறிலங்கா அரசின் தேடுதல் வேட்டைக்கு தலைமறைவாக வாழ்ந்த அவர் அதன் பின் பிரான்ஸ் வந்து சேர்ந்தார்.

புலம் பெயர்ந்து பாரிசில் வாழ்ந்து வந்த சபாலிங்கம் மனித நேயம் பேணும் ஒரு விடுதலைப் போராட்டத்தை நேசிப்பவராகவும் ஈழத்து கவிதை, இலங்கியங்களின் பதிப்பாளராகவும் இருந்து வந்தார். "ASSEAY" எனும் இடம் பெயர்ந்த தமிழர்களின் வெளியீட்டு நிறுவனத்தின் இயக்குனராகவும் இருந்து சமகாலக் கவிஞர்களான வ. ஐ. ச. ஜெயபாலன், சேரன், அருந்ததி, செல்வம், சோலைக்கிளி ஆகிய கவிஞர்களின் கவிதைப் புத்தகங்களையும் தாரகி (Taraki) அவர்களின் "THE ELUDING PEACE" ஈழ விடுதலைப் போராட்டம் பற்றிய பத்திரிகை எழுத்துக்களையும் வெளியிட்டுள்ளார். மேலும் "புத்தளம் முஸ்லிம் மக்கள் வரலாறு", இயக்க உட்படுகொலைகளைச் சித்தரிக்கும் "புதியதோர் உலகம்", இலங்கையில் தடை செய்யப்பட்ட 1958 கலவரத்தைப் பற்றிய தாச்சி வித்தாச்சி (Tarzi Vittachi) அவர்களின் "Emergency '58" மற்றும் யாழ்ப்பாண வைபவ மாலை" போன்ற நூல்கள் மீண்டும் வடிவம் பெற உழைத்திருக்கின்றார். இலங்கையில் மனித உரிமை மீறல்கள் பற்றிய யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் குழுவின் அறிக்கைகளை பிரெஞ்சு மொழியில் வெளிக்கொணர்ந்ததுடன் புகலிடத்தில் தமிழர்களின் அரசியல் செயற்பாடுகளில் தன்னை முடிந்தவரை ஈடுபடுத்திக் கொண்டார்.

மாற்றுக் கருத்துக்களையும், சிந்தனைகளையும் துப்பாக்கிக் குண்டுகள் மூலம் அழித்தொழித்து வருகின்ற இயக்கப் பாரம்பரியத்தில் மற்றெல்லோரையும் விட முன்னணியில் இருந்து வரும் தமிழீழ விடுதலைப் புலிகளே சபாலிங்கம் அவர்களின் படுகொலைக்கு பொறுப்பானவர்கள் என்று நாம் கருதுகின்றோம். பாரிஸ் நகரில் இருக்கும் விடுதலைப்புலிகளின் தலைவர்களின் ஒருவரான லோறன்ஸ் திலகர் சபாலிங்கம் அவர்களின் படுகொலைக்கு தாங்கள் பொறுப்பல்ல என்று மறுத்திருந்த போதிலும் அதனை ஏற்றுக் கொள்வதில் எங்களுக்கு மிகுந்த சந்தேகம் உண்டு.

அனுராதபுரம் சிங்கள மக்கள் படுகொலை, அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோரின் படுகொலை, கிழக்கு முஸ்லீம்களின் படுகொலை போன்ற பல சம்பவங்களுக்கு தாங்கள் பொறுப்பாளர்களல்ல என்று அறிக்கை விட்டு பின்னர் மெல்ல மெல்ல உரிமை கோருவதென்பது விடுதலைப்புலிகளின் வரலாற்றில் உள்ளார்ந்து காணக் கிடக்கின்றது. .

மாற்றுக் கருத்துள்ளவர்களை அழிப்பதென்பதை இலங்கையிலும் இந்தியாவிலும் மட்டுமே இதுவரை மேற்கொண்டிருந்தவர்கள் இன்று ஐரோப்பாவிலும் தமது படுகொலைகளை ஆரம்பித்திருப்பது சர்வதேச அரங்கில் விடுதலைப் போராட்டத்தின் நலன்களுக்கு மிகுந்த பாதகமாக அமையும் என்பது அனைவருக்கும் தெரிந்ததே.

விடுதலைப் போராட்ட நலன்களுக்கு மேலாக சொந்த இயக்க நலன்களை முதன்மைப்படுத்துவது ஒட்டுமொத்தமாக தமிழ் பேசும் மக்கள் எல்லா வகையான சுதந்திரத்தையும் புதைகுழியில் தள்ளுவதாகும். இது மிகவும் வன்மையாக கணடிக்கப்படவேண்டியது மட்டுமல்லாது வெறுக்கப்பட வேண்டியதுமாகும்.

விடுதலைப் போராட்டத்தையும் மானிட விழுமியங்களையும் நேசித்து இரண்டையும் இணைத்து இயங்கி வந்த ராஜினி திராணகம போன்ற புத்திஜீவிகளின் படுகொலையின் வரிசையிலேயே இன்று சபாலிங்கம் அவர்களின் படுகொலையும் நிகழ்ந்துள்ளது. ராஜினி, சபாலிங்கம் போன்றோர்கள் தனி மனிதர்களாக இயங்கி வந்த போதும் அவர்களுடைய கருத்துக்களுக்கும் அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்புகளுக்கும் சர்வதேச அளவில் கிடைத்து வந்த அங்கீகாரமே கொலையாளர்களை பீதியுறப் பண்ணியுள்ளது.

தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ஆவணங்கள் பேணப்படவேண்டும் என்பதில் அக்கறை கொண்டிருந்த சபாலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணத்தின் பழைய வரலாற்றைக் கூறும் "யாழ்ப்பாண வைபவ மாலை" என்னும்

படிப்பகம்